**R 4346 (page 73)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# ஜெபத்திற்கு விடையாக விடுதலை

## DELIVERANCE IN ANSWER TO PRAYER

## அப்போஸ்தலர் 12:1-19

*"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."சங்கீதம் 34:7*

### பஸ்கா காலப் புடைத்தெடுத்தல்கள்

யூதர்களுடைய அதிலும் விசேஷமாகச் செல்வாக்குமிக்கவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கத்தில் அகிரிப்பா, அப்போஸ்தலனாகிய யாக்கோபைச் சிரைச்சேதம் பண்ணினார் மற்றும் இது யூதர்களுக்கு மிகவும் பிரியமாய் இருப்பதைக்கண்டு இவர் அப்போஸ்தலனாகிய பேதுருவை கைதுசெய்தார். இங்கு இடம்பெறுகின்றதான கிரேக்க வார்த்தையானது, அவர் தேடப்பட்டு, கைதுசெய்யப்பட்டார் என்பதைக்குறிக்கின்றதாய் இருக்கின்றது. அநேகமாக அப்போஸ்தலர்கள் அனைவரும் அந்த ஒரு காலப்பகுதியில் மறைவில் காணப்பட்டனர்; எனினும் பஸ்கா காலத்தின் நிமித்தமாகப் பரிசுத்த பேதுரு வெளியே வந்தபோது, அவர் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்; பஸ்கா வாரத்தினுடைய இறுதியில் இவரை நேரடியாய்க் கொன்றுபோடுவதற்கு அகிரிப்பா திட்டமிட்டிருந்தார். ஆனால் இதற்கிடையில் இந்தப் பாடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று, பரிசுத்த பேதுருவைக் கர்த்தர் விடுவித்தார்.

அந்தப் பஸ்கா காலக்கட்டத்தின் போதான சபையினுடைய துக்கத்தை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது மற்றும் இந்தத் துயரமானது, அவர்களுக்கு நமது கர்த்தருடைய மரணத்தின்போதான வேளையையும், அப்போது அவரது பின்னடியார்கள் மத்தியில் காணப்பட்டதான பீதிகளையும் ஓரளவுக்கு நினைப்பூட்டியிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் சில வருடங்களாக ஏதோ ஒவ்வொரு பஸ்கா காலமும், ஒவ்வொரு நினைவுகூருதலும், கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியிலான விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சைக்கான காலமாக இருப்பதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. வருடத்தினுடைய அந்த ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் யூதாசும், பேதுருவும், கர்த்தருடைய சீஷர்கள் அனைவரும் தங்கள் புடைத்தெடுத்தல்களைப் பெற்றுக்கொண்டதுபோன்று, கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள மற்றவர்களிடத்தில் சாத்தான் செய்ய விரும்புகின்றதான புடைத்தெடுத்தல்களும், நடுங்கவைத்தல்களும் நினைவுகூருதல் காலத்தில் விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாக நமக்குத் தோன்றுகின்றது. இந்த அனுமானமானது உண்மையானதாகவோ அல்லது உண்மையானதில்லை என்பதாகவோ இருப்பினும், கர்த்தருடைய ஜனங்கள் இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனுடைய தந்திரங்களுக்கு எதிராக விசேஷமாய் ஜாக்கிரதையாய் இருப்பது என்பது ஒன்றும் அவர்களுக்கு நிச்சயமாய்ப் பாதகமாய் இருப்பதில்லை; ஏனெனில் சோதனைக்குட்படாதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

வருஷத்தினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் எதிராளியானவனிடமிருந்து விசேஷமான சோதனைகள், விசேஷமான பரீட்சைகள் வரும் என்ற கருத்தானது, சபை சரித்திரத்தினுடைய பழைய வழிகள் வாயிலாக நம் மத்தியில் கடந்துவந்து காணப்படுகின்றதான விசேஷித்தக் கட்டுப்பாடுகளும், உபவாசங்களும், ஜெபமும் ஏறெடுக்கும் காலம் (அ) லெந்து காலங்கள் என்பதற்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது என்று தோன்றுகின்றது. இன்று அநேகர் லெந்து காலங்களைவெறுமனே ஆச்சாரமாய்க் கைக்கொள்வதினால், இப்படியாகவே அனைவருக்கும் இருக்க வேண்டுமென்றில்லை மற்றும் ஆரம்பத்திலும் இப்படியாக இருக்கவில்லை. வேதவாக்கியங்களுக்கு இசைவாக, அனைத்துக் காலப்பகுதிகளிலும் ஜெபம் பண்ணுவதற்கும், உபவாசம் இருப்பதற்கும் நாம் தீவிரமாய்ப் பரிந்துரைக்கின்றோம் மற்றும் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு முன்னதாக 40 நாட்கள் காலங்களில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கூடுமானமட்டும் விசேஷமாய் விழிப்புடன் காணப்படுவதற்கும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

நாம் ஏற்கெனவே விவரித்துள்ளதுபோலவே, நமது சுயத்தை வெறுத்தல்களானது, உணவு மற்றும் பானம் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய விருப்பங்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். எனினும் வருஷத்தினுடைய வசந்த/இளவேனிற் காலப்பகுதியில் மிகவும் எளிமையான

மற்றும் மிகவும் வரையறைக்குட்பட்ட அளவிலான உணவை உண்பது என்பது, (ஜெபங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இல்லாமல் இருந்தாலுங்கூட) சாதாரணமாகவே பெரும்பான்மையான மனுக்குலத்திற்கு நன்மையாகவே இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. குளிர்க் காலத்தினுடைய குளிரானது, நன்கு பசியைத் தூண்டி அதிகம் உணவு உட்கொள்ளப்படுவதன் விளைவாக, இளவேனிற் காலம் வரும்போதும் அதே பழக்கம் தொடர்வதினால் அளவு மீறி உண்ணும் தன்மை உண்டாவதினால் அல்லது ஜீரண உறுப்புக்களுக்கு அதிக பளு ஏற்படுவதினால், உணவு கட்டுப்படுத்தப்படுவதன் மூலம் பளு குறைக்கப்படுவது அவசியமாயிருக்கின்றது மற்றும் அளவு மீறி உண்ணும் தன்மையானது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமற்று இருப்பதினால், உணவு கட்டுப்படுத்துதல் என்பது ஆவிக்குரியவற்றிற்குச் சாதகமாய்க் காணப்படுகின்றது.

-------------------------